**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.301/2017**

Date: 20.01.2025.

PW– 6 – தியாகராஜன்

A1 and A2 present.

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் கிராமநிர்வாக அலுவலராக கடந்த 9 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறேன். கொலை நடந்துள்ளது விசாரணை செய்யவேண்டும் என்று போன் மூலம் போலிசார் எனக்கு தகவல் சொல்லி வரச்சொன்னார்கள். போலிசார் சாட்சிக்கு அழைத்தால் எனது மேல்அதிகாரியிடம் எழுத்துமூலமாக அனுமதி பெற்றுக்கொண்டு தான் செல்லவேண்டும் என்று வழிகாட்டுவிதிகள் உள்ளது என்றால் ஆமாம்.

அது போல் இந்த வழக்கில் நான் எழுத்து மூலம் அனுமதி பெற்று காவல்நிலையம் செல்லவில்லை. சம்பவம் நடைந்த கிராமம் எனது அதிகார எல்லைக்கு உட்பட்ட கிராமம் தான். ஒரு தாலுக்கா விட்டு மற்றொரு தாலுக்காவிற்கு செல்லவேண்டும் என்றால் எழுத்துமூலம் உயர்அதிகாரிடம் அனுமதி பெற்று தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது உயர்அதிகாரிடம் எழுத்துமூலமான அனுமதி பெற்று சாமியாபுரம் கூட்டு ரோடு கிராமத்திற்கு நான் செல்லவில்லை.

நான் சென்றபோது 2 வது எதிரி கடையை திறந்து வைத்திருந்தார். நான் பார்த்தபோது அவர் கடையில் அமர்ந்திருந்தார். அந்த கடை துப்பாக்கி பழுதுபார்க்கும் உரிமம் பெற்ற கடை என்பதும் அதற்கான பதிவேட்டை 2 வதுஎதிரி என்னிடம் காண்பித்ததார் என்றால் நான் பார்கவில்லை. என்னிடம் காண்பிக்கவில்லை. 2 வது எதிரி துப்பாக்கி பழுதுபார்க்கும் கடை வைத்திருந்தார். 2 வது எதிரியிடம் துப்பாக்கி பழுதுபார்க்கும் கடை உரிமம் பெற்று வைத்திருந்தாரா என்று நான் கேட்கவில்லை. போலிசார் என் முன்பு அது பற்றி 2 வது எதிரியை கேட்கவில்லை.

2 வது எதிரி வைத்திருந்த கடைக்கு பெயர் இருந்ததா என்று எனக்கு நினைவில்லை. கடையை போலிசார் தான் எனக்கு அடையாளம் காட்டினார்கள். எனது 9 வருட பணியில் போலிசார் தாக்கல் செய்யும் வழக்குகளில் பார்வை மகஜர்

சாட்சி, ஒப்புதல் வாக்குமூல சாட்சி, கைப்பற்றுதல் மகஜர் சாட்சியாக இருந்துள்ளேன் என்றால் சரிதான். பக்கத்து கிராமத்திற்கு சென்றபோது அந்த கிராமநிர்வாக அதிகாரி மற்றும் வருவாய்துறை அதிகாரிகளை விசாரணை செய்து 2வது எதிரி துப்பாக்கி பழுதுபார்க்கும் கடை வைத்துள்ளாரா என்று நான் விசாரிக்கவில்லை.

2வது எதிரி கடை வைத்திருந்ததாக சொல்லும் பகுதி மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். 2வது எதிரியின் வீட்டிற்கு இரண்டு புறமும் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். நாங்கள் சென்றபோது பொதுமக்கள் வந்து பார்த்தார்கள் என்று சொன்னால் அது எனக்கு நினைவில்லை. 2வது எதிரி 1ஆம் எதிரிக்கு துப்பாக்கி ரூ.2000–க்கு விற்றதாக சொன்னார் என்று நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல.

என் முன்பாக சா.பொ.6 முதல் 13 வரையிலான பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 மகஜர் என் முன்பு தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் பொதுமக்கள் சொத்து தொடர்பாக சான்று கேட்டால் அதை பேப்பரில் எழுதி நான் சீல் வைத்து கொடுப்பேன். நான் கையெழுத்து இட்டதாக சொல்லும் மகஜரில் நான் எனது அலுவலக சீல் வைத்துள்ளே என்றால் அது எனக்கு நினைவில்லை. தற்போது சாட்சி அ.சா.ஆ.5 மகஜரை பார்த்துவிட்டு அதில் சீல்வைத்து கையெப்பம் செய்யவில்லை என்று சொல்லுகிறார். கைப்பற்றப்பட்டதாக சொல்லும் பொருட்கள் என் முன்னிலையில் மூடி ஸ்பெசிமன் முத்திரையிட்டு எடுத்து செல்லப்படவில்லை என்றால் எனக்கு நினைவில்லை.

என் முலமாக குறியிடு செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்களை காவல் துறையினர் வழக்கிற்காக தயார் செய்துள்ளார்கள் என்றும், நான் காவல்துறையினரின் கையிருப்பு சாட்சி என்றும், காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் 2வது எதிரியின் கடைக்கு சொன்ன தேதியில் செல்லவில்லை என்றும், போலிசார் சொல்லிகொடுத்திற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் எங்களது அலுவலகத்திலிருந்து 1 கி.மீ தூரத்தில் இருக்கிறது. நான் கிராமநிர்வாக அதிகாரி என்பதால் கிராமநிர்வாக அதிகாரி பின்பற்றவேண்டிய நடைமுறைகள் எனக்கு தெரியும். குற்றங்கள் நடந்தால் முக்கியஸ்தர்கள் மூலம் எங்களுக்கு தகவல் வரும். காவல்துறையினர் எனக்கு சொல்லும்வரை சம்பவம் பற்றி எந்த தகவலும் எனக்கு வரவில்லை. பிற்பகல் 1.30 மணிக்கு எங்கள் அலுவலகத்திற்கு பொது மக்கள் யாரும் வந்து சம்பவம் பற்றி சொல்லவில்லை என்றால் நான் களப்பணியில் இருந்தேன்.

கிராமநிர்வாக அலுவலகத்தை விட்டு வெளியில செல்லும் போது எந்த பணிக்காக செல்கிறோம் என்ற விவரத்தை தகவல் பலகையில் எழுதுவோம். சம்பவ தேதியில் எந்த கிராமத்திற்கு களப்பணிக்கு சென்றேன் என்ற விவரத்தை தகவல் பலகையில் எழுதிவைத்தேன். மேற்படி விவரத்தை மூமன்ட் ரிஜிஸ்டரில் எழுதவேண்டும். ஆனால் சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதியில் நான் களப்பணிக்கு சென்ற விவரத்தை மூமண்ட் ரிஸிஸ்டரில் எழுதவில்லை. போலிசார் விசாரணையில் நான் எந்த கிராமத்தில் ஆய்வு பணி செய்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் போலிசார் வாக்குமூலத்தில் நான் அவ்வாறு விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் சாட்சி கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தை பார்த்துவிட்டு அவ்வாறான விவரங்கள் வாக்குமூலத்தில் இல்லை என்று சொல்லுகிறார்.

எனது பெயர் தியாகராஜ் தான். தியாகராஜன் அல்ல. போலிசார் எத்தனை மணிக்கு போலிசார் தகவல் சொன்னார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் பிரேதம் அங்கு கிடந்ததாக நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். கிராமநிர்வாக நடைமுறை விதிபடி கிராமத்தில் குற்றம் நடந்தால் அது தொடர்பான விவரத்தை உயர்அதிகாரிக்கு எழுத்துமூலமாக தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். ஒரு நகலை வட்டாட்சியருக்கும், ஒரு நகலை எனது அலுவலகத்திற்கும், ஒரு நகலை விசாரணை அதிகாரிக்கும் அனுப்பவேண்டும் என்றால் சரிதான்.

அதுபோல் அறிக்கை நான் தாயர் செய்யவில்லை. குற்றவழக்குகளுக்கு சாட்சியாக சென்றால் சாட்சியாக இருந்தபின்பு மூமண்ட் ரிஸிஸ்டரில் அது குறித்த விவரத்தை பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கில் நான் மூமண்ட் ரிசிஸ்டர் எழுதவில்லை. சாட்சி இருந்தது தொடர்பாக நான் உயர்அதிகாரிகளுக்கு எழுத்து மூல அறிக்கை தயார் செய்து அனுப்பவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன்பாகவே பொதுமக்கள் அங்கு கூடியிருந்தார்கள் என்றால் சரிதான். போலிசாரும் நான் சென்ற போது அங்கு இருந்தார்கள்.

நான் செல்வதற்கு முன்பு போலிசார் யாரை விசாரித்தார்கள். என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் கைப்பற்றதாக சொல்லப்படும் பொருட்கள் அங்கேயே பேக்செய்து முத்திரையிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.2 இல் குற்ற எண் மற்றும் சட்டபிரிவு மற்றும் கைப்பற்றுதல் நேரத்தில் திருத்தம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்ததில் என்னிடம் சுருக்கொப்பம் பெறவில்லை என்றால் சரிதான்.

சாபொ.2 செருப்பு எந்த நிறுவனத்தால் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் செருப்பில் குறிப்பிடப்பட்டிருந்ததா என்று எனக்கு நினைவில்லை. மேற்படி விவரம் அ.சா.ஆ.2 மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சா.பொ.1 கைகடிகாரத்தின் சோனி என்ற வாசகம் தவிர வேறு என்ன விவரங்கள் இருந்தது என்று எனக்கு நினைவில்லை. மேற்படி விவரங்கள் அ.சா.ஆ.2 மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சோனி என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

அ.சா.ஆ.2 இல் லெதர் என்று எழுதி அடிக்கப்பட்டு அதன் பின்பு பிளாஸ்டிக் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு என்னிடம் சுருக்கொப்பம் எதுவும் பெறப்படவில்லை. சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடம் அடுக்கடுக்காக மலைபகுதிகள் உள்ள இடம் என்றால் அது எனக்கு நினைவில்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/–L. Kaliavani,

III Additional District Judge,Salem.